அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 376

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1987, யூலை 17 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்கள் யாவருக்கும்.

ஆயுள்வேத மருத்துவத் தொழில் புரிபவர்களாகப்
பதிவுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக்
<u>கடமைலீவு - தாபன விதிக்கோவை-அத்தி XII</u>

தாபன விதிக்கோவை அத்தியாயம் XII இன் 13ஆம் பிரிவின் கீழ் உபபிரிவு 13:8ஐ பின்வருமாறு புகுத்துக:

"பதிவுபெற்ற மருத்துவத் தொழில் புரிபவராகவுமுள்ள அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அவர் உடனடி மருத்துவக் கவனிப்பை வேண்டுகின்ற நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பவராகவிருக்குமிடத்து மாதமொன்றுக்கு 3 நாட்களுக்கு மேற்படாத கடமைலீவு திணைக்களத் தலைவர் அவ்வுத்தியோகத்தர் உண்மையிலேயே அந்நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்துள்ளாரெனத் திருப்தியடையுமிடத்து வழங்கப்படலாம்."

02. இந்த அறிவுறுத்துரைகள் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் பணியாளர்களுக்கும் ஏற்புடையனவென்பதைக் கவனிக்குமாறு அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் வேண்டப்படுகின்றனர்.

ஒப்பம்: டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.